**<u>O.S. No. 243 /2023</u>**

**<u>Date: 09.07.2026</u>**

**பி.வா.சா.2 மாரியப்பன்**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தது யார் என்றால் ராமர் அவர் பெயர் பெரிய ராமரா என்றால் எனக்கு தெரியாது. ராமரை எத்தனை வருடங்களாக எனக்கு தெரியும் என்றால் எனது சிறுவயது முதல் தெரியும், ராமருக்கு எந்த ஊர் மேலசிவகாமியாபுரம். எனக்கு ஆராய்ச்சிபட்டி. நான் விவசாய தொழில் செய்து வருகிறேன். எனக்கு 72 வயது ஆகிறது. மேற்படி ராமர் என்பவரின் அப்பா பெயர் பெருமாள் தேவர். பெருமாள் தேவரின் மனைவி பெயர் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பெருமாள் தேவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 4 ஆண் மக்களும், 1 பெண்ணும் உள்ளார்கள். மேற்படி வாரிசுகளை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன் மேற்படி வாரிசுகளின் பெயர்கள் எனக்கு தெரியாது. மேற்படி பெருமாள் தேவருக்கு எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்றாலும், அவைகள் எந்த எந்த கிராமத்தில் உள்ளது என்றாலும் எத்தனை வீடுகள், எவ்வளவு நஞ்சை , மற்றும் புஞ்சை நிலங்கள் உள்ளது என்றாலும் எனக்கு தெரியாது. மேற்படி ராமரும், அவரது தம்பியும் வந்து சொத்துக்களை பாகம் செய்து கொடுக்க என்னிடம் 15 ஆண்டுகளுக்கு முன்னர் சொன்னார்கள். மேற்படி பாகத்தை எங்கு வைத்து செய்தோம் என்றால் அவர்கள் கிணற்றில் வைத்து செய்தோம், அப்போது அண்ணன் , தம்பி 3 பேர்கள் இருந்தார்கள். மொத்தம் 5 ஏக்கர் நிலம் இருந்தது அதில் ஒவ்வொருவருக்கும் 1 ஏக்கர் வீதம் பகிர்ந்து கொடுத்தோம் வேறு எதையும் பகிர்ந்து கொடுக்கவில்லை. மொத்தம் அவரது குடும்பத்திற்கு எத்தனை கிணறு என்று தெரியாது. எனக்கு ஆராய்ச்சிபட்டி கிராமம் இல்லை என்றாலும், நான் உபயவாதிகளின் குடும்ப சொத்துக்களை 15 ஆண்டுகளுக்கு முன்பாக பகிர்ந்து கொடுத்ததாக சொல்வதும், என்னை உபயவாதிகள் சொத்துக்களை பகிர்ந்து கொடுக்க அழைத்ததாக சொல்வதும், மாரிராஜ், மருதபாண்டியன் ஆகியோருடன் சேர்ந்து பகிர்ந்து கொடுத்ததாக சொல்வதும் பொய்யானது என்றாலும் சரியல்ல. எனக்கு உபயவாதிகளின் குடும்பத்தை பற்றி தெரியாது என்றாலும், அவர்களுக்கு எவ்வளவு சொத்துக்கள் உள்ளது பற்றி தெரியாது என்றாலும், நான் பெரிய ராமருக்கு வேண்டிய நபர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், முதல் நிலை சாட்சியத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றாலும், எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றாலும் சரியல்ல.

Sd/–P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.